SRI LANKA

## இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜூலை 2026

# (Level II Examination – July 2026)

## வினாக்களும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்

# (2802) டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமைகள் (DTI)


**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# பிரிவு II பரீட்சை – ஜூலை 2026

# (2802) டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமைகள்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**பதினைந்து (15) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பகுதி - A**

## வினா 01 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.1** | (4) | **1.6** | (2) | **1.11** | சரியானது |
| **1.2** | (3) | **1.7** | (1) | **1.12** | தவறானது |
| **1.3** | (4) | **1.8** | (3) | **1.13** | சரியானது |
| **1.4** | (1) | **1.9** | (1) | **1.14** | தவறானது |
| **1.5** | (4) | **1.10** | (1) | **1.15** | சரியானது |

**வினா 1.1 – 1.10 - (ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகள்)**
**வினா 1.11 – 1.15 - (ஒவ்வொன்றிற்கும் 01 புள்ளிகள் வீதம் 05 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பகுதி A முடிவு**

| ஐந்து (05) கட்டாய வினாக்கள்<br>(மொத்தம் 50 புள்ளிகள்) | பகுதி - B |
|---|---|

## *வினா 02ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

**அத்தியாயம் 01 முறைமை எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் முறைமைகளின் தாக்கம்**

**(a)** 1. **வன்பொருள் (Hardware)**

- தரவுகளை செயன்முறைப்படுத்த மற்றும் தகவல்களை உருவாக்கப் பயன்படும்.
- வன்பொருள் மென்பொருளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

2. **மென்பொருள் (Software)**

- மென்பொருள் என்பது விற்பனை, இருப்பு முகாமை, வழங்குநர் கட்டளைகள் மற்றும் வாடிக்கையாளர் மருந்துகள் போன்ற மருந்தக செயற்பாடுகளை செயலாக்கப் பயன்படுத்தப்படும் நிகழ்ச்சியமைப்புக்கள் மற்றும் பயன்பாடுகளைக் கொண்டுள்ளது.
- இது வணிக செயன்முறைகளை தன்னியக்கபடுத்துகிறது, செயல்திறனை மேம்படுத்துகிறது, மற்றும் கைமுறை பிழைகளை குறைக்கிறது.

3. **தரவு (Data)**

- தரவு என்பது தகவல் முறைமையினால் சேகரிக்கப்பட்ட மூல உண்மைகள், புள்ளிவிபரங்கள் மற்றும் விபரங்கள் ஆகும்.
- இது செயன்முறைப்படுத்தப்பட்டு, அர்த்தமுள்ள தகவல்களை உருவாக்க சேமிக்கப்படும்.

4. **நடைமுறைகள் (Procedures)**

- பணிகள் செய்யப்பட வேண்டிய முறையினை விளக்கும் விதிகள், செயன்முறைகள், வழிகாட்டுதல்கள், முறைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்.
- அவை நிலைத்தன்மை, செயற்திறன் மற்றும் துல்லியத்தைப் பேண உதவுகின்றன.

5. **தொடர்பாடல் (Communication)**

- தொடர்பாடல் என்பது வெவ்வேறு பயனர்கள் மற்றும் முறைமைகளுக்கு இடையில் தரவு மற்றும் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் செயன்முறையைக் குறிக்கும்.
- இது வெவ்வேறு சாதனங்கள், முறைமைகள் மற்றும் தரவுத்தளங்களை இணைக்க உதவுகிறது, இதனால் தகவல்களை வினைத்திறனாக திறம்பட பகிர்ந்து கொள்ள முடியும்.

6. **மக்கள் (People)**

- மக்கள் என்பது தகவல் முறைமையை இயக்கும் மற்றும் நிர்வகிக்கும் முகாமையாளர்கள், மருந்தாளர்கள், பணப் பதிவாளர்கள், மற்றும் முறைமைப் பயனர்களை உள்ளடக்கியது.
- அவர்களின் அறிவு, பயிற்சி, மற்றும் முறைமையின் சரியான பயன்பாடு துல்லியமான தரவு உள்ளீடு மற்றும் பயனுறுதிமிக்க தீர்மானம் மேற்கொள்ளலுக்கு அவசியமாகும்.

**(04 புள்ளிகள்)**

aat SRI LANKA

**(b)** 1. **மேம்படுத்தப்பட்ட இருப்பு முகாமை / தன்னியக்க இருப்பு முகாமை முறைமை**

- முறைமை இருப்பு மட்டங்களை நிகழ்நேரத்தில் கண்காணித்து, மருந்துகள் குறைந்து வரும்போது ஊழியர்களுக்கு எச்சரிக்கை செய்யும்.
- இது இருப்புப் பற்றாக்குறையை குறைத்து, மருந்துகள் வாடிக்கையாளர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும்.
- கையேட்டுமுறைத் தவறுகளைக் குறைக்கும்.
- வாடிக்கையாளர் திருப்தியை மேம்படுத்துகிறது.

2. **விரைவான மற்றும் சிறந்த தீர்மானம் மேற்கொள்ளல்**

- விற்பனை, இருப்பு, மற்றும் வாடிக்கையாளர் கொள்வனவுகள் குறித்த கணினிமயமாக்கப்பட்ட அறிக்கைகள் விரைவாக உருவாக்கப்படலாம்.
- இருப்புக் கட்டளையிடல், பிரபலமான மருந்துகளை அடையாளம் காணுதல் மற்றும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் முகாமை சரியான நேரத்தில் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

3. **சலாகைக்குறி வருடல் (Barcode Scanning) முறைமை**

- பட்டியல் உருவாக்க செயன்முறையை விரைவுபடுத்துகிறது.
- மனிதத் தவறுகளைக் குறைக்கிறது.

4. **POS முறைமை ஒருங்கிணைப்பு**

- விற்பனையை உடனடியாக பதிவு செய்கிறது.
- அறிக்கையிடல் துல்லியத்தை மேம்படுத்துகிறது.

aat SRI LANKA

5. **விரைவான மற்றும் துல்லியமான அறிக்கையிடல்**

கையேட்டுமுறைப் பதிவு வைத்தலுடன், அறிக்கைகளை உருவாக்குவது மெதுவாகவும், தவறுகளுக்கு ஆளாகக்கூடியதாகவும் இருக்கும். ஒரு தகவல் முறைமை அதிக துல்லியத்துடன் தினசரி, வாராந்த, அல்லது மாதாந்த விற்பனை அறிக்கைகளை விரைவாக உருவாக்க முடியும். இது முகாமை நம்பகமான தரவுகளின் அடிப்படையில் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ள அனுமதிக்கிறது, அதாவது சிறந்த விற்பனை பொருட்களை அடையாளம் காணுதல் அல்லது வணிக செயல்திறனை மிகவும் திறம்பட கண்காணித்தல் போன்ற வகையில்.

6. **சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் பதிவு முகாமை**

ஒரு கணினிமயமாக்கப்பட்ட முறைமை வாடிக்கையாளர் மருந்து வரலாறு மற்றும் கொள்வனவுப் பதிவுகளை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட தரவுத்தளத்தில் சேமிக்க முடியும். இது தேவைப்படும்போது தகவல்களை மீட்டெடுப்பதை எளிதாக்குகிறது, ஊழியர்கள் விரைவான சேவை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட கவனிப்பை வழங்க உதவுகிறது. இது முக்கியமான பதிவுகளை இழக்கும் இடரையும் குறைத்து, வாடிக்கையாளர் தகவல்களை கையாளும் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துகிறது.

**(04 புள்ளிகள்)**

**(c)** (1) புரிந்துகொள்ளக்கூடியது
(2) பொருத்தமானது
(3) முழுமையானது
(4) கிடைக்கக்கூடியது
(5) நம்பகமானது
(6) சுருக்கமானது
(7) காலத்திற்கேற்றது
(8) செலவு பயனுறுதிமிக்கது.

**(02 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 03ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 02 - தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு**

**(a)** (1) **தரவின் கட்டமைப்பு:** தரவின் கட்டமைப்பே, நாம் அதனை சேமித்து மீட்டெடுக்க வேண்டிய முறையினைத் தீர்மானிக்கிறது. சரியான தரவுத்தளத்தைத் தெரிவு செய்வது, வெவ்வேறு வகையான தரவு வடிவங்களுடன் பணியாற்ற அனுமதிக்கிறது. இது தரவுகளை சேமிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் சரியான தரவு கட்டமைப்புகளைத் தெரிவு செய்ய அனுமதிக்கிறது.

(2) **சேமிக்கப்பட வேண்டிய தரவின் அளவு**: இந்த காரணி, ஒரு பயன்பாட்டிலிருந்து சேமிக்கப்பட வேண்டிய மற்றும் மீட்டெடுக்கப்பட வேண்டிய தரவின் அளவைத் தீர்மானிக்கிறது. சேமிக்க மற்றும் மீட்டெடுக்க வேண்டிய தரவின் அளவு, தெரிவுசெய்யப்பட்ட தரவுக் கட்டமைப்பு, பல கோப்பு முறைமைகளில் தரவுகளை கையாளும் தரவுத்தளத்தின் திறன் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும்.

(3) **வேகம் மற்றும் அளவிடும் திறன்**: இது தரவுத்தளத்திலிருந்து தரவுகளை மீட்டெடுப்பதற்கும், தரவுத்தளத்திற்கு தரவுகளை எழுதுவதற்கும் தேவையான வேகத்தை தீர்மானிக்கிறது. இது பயனர் பயன்பாட்டிற்கான அனைத்து உள்வரும் வாசிப்புகள் மற்றும் எழுத்துகளுக்கு சேவை செய்ய எடுக்கும் நேரத்தை கவனிக்கிறது. சில தரவுத்தளங்கள் வாசிப்பு-அதிக பயன்பாடுகளை உகப்பாக்க வடிவமைக்கப்பட்டிருக்க, ஏனையவை எழுத்துச் செறிவான தீர்வுகளை ஆதரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பயன்பாட்டின் உள்ளீடு/வெளியீடு தேவைகளை பூர்த்தி செய்யும் சரியான தரவுத்தளத்தைத் தேர்ந்தெடுப்பது ஒட்டுமொத்த வினைத்திறனை அதிகரிக்கும்.

(4) **தரவின் அணுகல்தன்மை**: ஒரே நேரத்தில் தரவுத்தளத்தை அணுகும் பயனர்களின் எண்ணிக்கை மற்றும் எந்த குறிப்பிட்ட தரவையும் அணுகுவதில் உள்ள கணக்கீட்டு நிலை ஆகியவை தரவுத்தளத்தைத் தெரிவுசெய்யும்போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான காரணிகளாகும். பயன்பாட்டு செயலாக்க வேகம், கருத்தில் கொள்ளப்படாவிட்டால், பாதிக்கப்படும்.

(5) **தரவு மாதிரியாக்கம்**: இது பயன்பாட்டின் அம்சங்களையும் அதன் தரவு தேவைகளையும் தரவு கட்டமைப்பில் வரைபடமாக்க உதவுகிறது, மேலும் தரவுத்தளத்திற்குள் அதையே செயற்படுத்த வேண்டும்.

aat SRI LANKA

(6) **பல தரவுத்தளங்களுக்கான வாய்ப்பு**: மாதிரியாக்க செயல்பாட்டின் போது, குறிப்பிட்ட தரவு கட்டமைப்பில் தரவுகளை சேமிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம், மேலும் அது இல்லாமல், சில கேள்விகளை முழுமையாக உகப்பாக்க முடியாது.

(7) **தரவின் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல்**: இது தரவுத்தளம் அதில் சேமிக்கப்பட்ட தரவுகளுக்கு வழங்கும் பாதுகாப்பின் அளவை சரிபார்க்கும் ஒரு முக்கிய அம்சமாகும். சேமிக்கப்பட்ட தரவு மிகவும் இரகசியமான சூழ்நிலைகளில், அது ஒரு பாதுகாக்கப்பட்ட தரவுத்தளத்தில் சேமிக்கப்பட வேண்டும்.

**(06 புள்ளிகள்)**

**(b)** (1) **கிரயம்:**

இணைப்பின் கிரயம் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய காரணியாகும். இங்கு வேகம், விலை மற்றும் அது வழங்கும் சேவைகளுக்கு இடையில் சிறந்த சமநிலை காணப்படல் வேண்டும்.

(2) **வேகம்**:

வணிக நிறுவனங்கள், நாளின் உச்ச நேரங்களில் மற்றும் உச்ச நேரங்களுக்கு புறம்பான நேரங்களில் வணிக செயற்பாடுகளை இயக்க வழங்கப்படும் வேகத்தின் அளவை கருத்தில் கொள்ள வேண்டும். சிலர், ஒரு இணைய சேவை வழங்குனரைத் தீர்மானிக்கும்போது வேகம் மிக முக்கியமான காரணி என்று கருதுகின்றனர்.

(3) **வணிகத் தேவையா அல்லது வீட்டத் தேவையா என்னும் விடயம்**:

இணைய சேவை வழங்குனர்கள் (ISP) பொதுவாக அவர்கள் வணிக பயனர்களுக்கும் குடியிருப்பு பயன்பாட்டிற்கும் வழங்கும் சேவைகளை வகைப்படுத்துகின்றன. வணிக-தர இணைப்புகள் அதிக நம்பகத்தன்மையை, அதிக பதிவேற்ற வேகத்தை, மற்றும் அதிக கட்டணங்களுடன் சில நிறுவனங்களுக்கு முக்கியமான பிற நன்மைகளை வழங்குகின்றன.

(4) **கிடைப்பனவு**

இது கிராமப்புறங்களில் முக்கிய தீர்மானிக்கும் காரணியாகும். வழங்குநர் தேவையான பகுதியில் சேவையை வழங்கவில்லை என்றால், ஒரு அதிவேக கேபிள் அல்லது /பைபர் இணைப்பு வணிகத்திற்கு பயனற்றது.

(5) **பாதுகாப்பு மற்றும் பெறுமதி சேர்த்த சேவைகள் (VAS):**

சேவை வழங்குநர்கள் /பயர்வால்கள், DDoS தாக்குதல் பாதுகாப்பு போன்ற மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்களை வழங்கும் திறன் கொண்டவர்கள். இந்த அம்சங்கள் இலவசமாக வழங்கப்படலாம் அல்லது தேரிவுசெய்யப்பட்ட தொகுப்பின் அடிப்படையில் VAS ஆக பெற வேண்டியிருக்கலாம். நிறுவன உட்கட்டமைப்பு மட்டத்தில் தாக்குதல்களைத் தடுப்பதை விட, ISP மட்டத்தில் நிறுவன முறைமை மற்றும் தரவுகளைப் பாதுகாப்பது மிகவும் வெற்றிகரமானது.

(6) **எவ்வளவு நம்பகமானது? சேவை நிலை ஒப்பந்தங்கள் உள்ளனவா போன்ற விடயங்கள்?**

பெரும்பாலான வணிக நிலை இணைய இணைப்புகள் இயக்க நேரம், தாமதம் மற்றும் பிற அளவீடுகள் குறித்த உறுதிமொழிகளுடன் வருகின்றன.

**(7) ஒப்பந்தத்தின் விதிமுறைகள் என்ன?**

சில ISP ஒப்பந்தங்கள் இணைய இணைப்பைப் பயன்படுத்தி பயனர்கள் என்ன செய்யலாம் என்பதை கட்டுப்படுத்துகின்றன. உதாரணமாக, சில ISP கள் வீட்டுத்துறை சேவை ஒப்பந்தங்களின் கீழ் உள்ள வாடிக்கையாளர்கள் வலைத்தளங்கள் அல்லது பிற இணையவழி சேவைகளை ஹோஸ்ட் செய்வதை குறிப்பாக கட்டுப்படுத்துகின்றன.

**(8) பதிவேற்ற மற்றும் பதிவிறக்க வேகம் என்ன?**

வழங்கப்பட்ட சேவை இரண்டிற்கும் ஒரே வேகத்தை வழங்காததால், பதிவேற்ற மற்றும் பதிவிறக்க வேகத்தை கருத்தில் கொள்வது முக்கியம். இது இணையவழி சேவைகளை இயக்கும் அல்லது கோப்பு சேமிப்பு மற்றும் இணையவழிக் காப்புப்பிரதி போன்ற மேகத்தள சேவைகளை அடிக்கடி அணுகும் வணிகங்களுக்கு அவசியமாகும்.

**(9) ISP ஒருங்கிணைந்த குரல் மற்றும் தரவு சேவையை வழங்குகிறதா?**

பல வணிக நிறுவனங்கள் ஒரே விற்பனையாளரிடமிருந்து, ஒரே வரிசைகளில், பெரும்பாலான ஒரே உபகரணங்களைப் பகிர்ந்து கொண்டு, குரல் மற்றும் தரவு சேவைகள் இரண்டையும் பெறுகின்றன. ஒருங்கிணைந்த சேவைகள் வெவ்வேறு ISP களிடமிருந்து தனித்தனி குரல் மற்றும் தரவு சேவைகளை விட குறைந்த செலவு மற்றும் நிர்வகிக்க குறைந்த சிக்கலானதாக இருக்கும்.

**(10) மீள்தகவுத் தெரிவுகள் எவை?**

நம்பகத்தன்மை, குறிப்பாக வணிக நிறுவனங்களுக்கு, மிகப்பெரிய காரணியாக இருக்கலாம். நம்பகத்தன்மையற்ற இணையம் இருப்பது ஒரு இடராக இருப்பதுடன், நிறுவனங்களுக்கு உற்பத்தித்திறனற்றது ஆகும். இணைய சேவை இடையூறுகளுக்கு இடரை வாங்க முடியாத ஒரு தொழிலில் நிறுவனம் இருந்தால், சேவை நிலை ஒப்பந்தத்தை (SLA) வழங்கும் ஒரு ISP ஐ கருத்தில் கொள்வது புத்திசாலித்தனமானது.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 04ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 03 - நிறுவனங்களில் தகவல் முறைமைகள்**

**(a)** (1) **ஆழ ஊடுருவும் திறன்**

தகவல்களை விரிவாக ஆய்வு செய்தல். உதாரணமாக, ஒரு நிறைவேற்றுனர் பிராந்திய ரீதியாக அல்லது ஆண்டுகள் அல்லது மாதங்கள் ரீதியாக நிறுவன விற்பனையில் ஏற்பட்ட குறைவை அவதானிக்கலாம்.

(2) **முக்கிய வெற்றிக் காரணிகள்**

ஒரு நிறுவனத்தின் வெற்றிக்கு மிகவும் முக்கியமான காரணிகள். இத்தகைய காரணிகள் எந்த முகாமை மட்டத்திலிருந்தும் (தந்திரோபாய, முகாமை, தொழிற்பாட்டு) காணப்படலாம்.

**(3) தகவல்களுக்கான சிறந்த அணுகல்**

ஒரு கணினி முறைமையால் வழங்கப்படும் தற்போதைய தகவல்களுக்கு விரைவான அணுகல். இதற்கு தினசரி அல்லது மணிநேர செயல்பாட்டு கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் தேவைப்படலாம். உதாரணுமாக, நிகழ்நேர அணுகல் மற்றும் அறிக்கையிடல் வசதிகள்.

**(4) பகுப்பாய்வு**

EIS இல் உள்ள பகுப்பாய்வு திறன்கள், கணித சூத்திரங்களைப் பயன்படுத்தி நேரடியாக உகந்த தீர்வைப் பெற அல்லது முடிவுகளை கணிக்க, முக்கியமாக கட்டமைக்கப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதில் உதவுகின்றன.

**(5) விலக்கு அறிக்கையிடல்**

இதில் பயனரின் கவனம் மிகவும் மோசமான அல்லது சிறந்த செயற்திறன் சூழ்நிலைகளில் மட்டுமே தேவைப்படுகிறது.

**(6) பயனர்-நட்பு இடைமுகம்**

சில முறைமைகள் பயனரை எச்சரிக்கும் ஒலி/கட்புல கூறுகளுடன் பொருத்தப்பட்டுள்ளன.

**(7) சிறந்த தொடர்பாடல் வசதிகள்**

மின்னஞ்சல், பிணையத்தின் மூலம் கோப்புகளை மாற்றுதல், மற்றும் பிற இணைய அடிப்படையிலான தகவல் தொடர்பு வசதிகள் போன்ற சிறந்த தொடர்பாடல் முறைகள் கிடைக்கின்றன.

**(04 புள்ளிகள்)**

**(b)** பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு ஏற்கத்தக்கவை:

- தரவு காட்சிப்படுத்தல் கருவிகள்
- வணிக நுண்ணறிவு அறிக்கையிடல் கருவிகள்
- சுய-சேவை பகுப்பாய்வுத் தளங்கள்
- புள்ளிவிபரவியல் பகுப்பாய்வு கருவிகள்
- பெருந்தரவுத் தளங்கள்

**(02 புள்ளிகள்)**

**(c)**

(1) நிதிசார் நன்மைகள்
(2) நெகிழ்வுத்தன்மை
(3) போட்டி நன்மை
(4) உயர் தரம் மற்றும் சிறந்த செயற்திறன்
(5) புத்தாக்கம் மற்றும் தொழிநுட்பம்
(6) விரைவான திரும்பல் காலங்கள்
(7) அளவிடுதல் திறன்
(8) ஒழுங்குமுறைகளுடனான இணக்கம்
(9) தரவு நுண்ணறிவு மற்றும் பகுப்பாய்வு
(10) 24/7 செயற்பாடுகள்

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

SRI LANKA

## வினா 05 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 04 - இணையப் பாதுகாப்பு மற்றும் தரவு பாதுகாப்பு**

**(a)**

(1) நோயாளிகளின் இரகசியமான தனிப்பட்ட மற்றும் மருத்துவ தகவல்களை அனுமதிக்கப்படாத அணுகலில் இருந்து பாதுகாக்கிறது.

(2) மருத்துவமனையின் எண்ணியல் சுகாதார சேவைகளில் நோயாளி நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் உருவாக்குகிறது.

(3) தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டம் (PDPA) போன்ற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணங்குவதை உறுதி செய்கிறது.

(4) அடையாள திருட்டு, தரவு மீறல் மற்றும் நிதி அல்லது நற்பெயர் சேத இடரைக் குறைக்கும்.

(5) சுதந்திரத்தை பாதுகாத்தல் மற்றும் கண்காணிப்பு துஸ்பிரயோகத்தை தடுத்தல்.

(6) இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களை தடுக்கிறது.

(7) நிதி மோசடி மற்றும் ஒருமைப்பாட்டு அச்சுறுத்தலை தடுக்கிறது.

**(04 புள்ளிகள்)**

**(b)**

(1) **தரவு குறியாக்கம்**: இது சாதாரண தரவுகளை (உரை, கோப்புகள், அல்லது செய்திகள் போன்றவை) ஒரு சிறப்பு விசை இல்லாமல் படிக்க முடியாத ஒரு குறியிடப்பட்ட வடிவமாக மாற்றும் செயன்முறையாகும். இது உங்கள் தரவுகளை ஒரு பெட்டியில் பூட்டி, நம்பகமான நபர்களுக்கு மட்டுமே அதைத் திறக்கும் சாவியை வழங்குவது போன்றது.

(2) **வலுவான அங்கீகார முறைகளை செயற்படுத்துதல்**: உணர்திறன்மிக்க தரவு மற்றும் முறைமைகளை அங்கீகரிக்கப்பட்ட பயனர்கள் மட்டுமே அணுகுவதை உறுதி செய்ய இரண்டு-காரணி (2FA) அல்லது பல-காரணி அங்கீகாரம் (MFA) பயன்பாடு.

(3) **வலுவான கடவுச்சொற் பயன்பாடு:** கடவுச்சொற்கள் நினைவில் வைக்க எளிதானதாகவும், யூகிக்க கடினமானதாகவும் இருக்க வேண்டும். குழந்தையின் பெயர், செல்லப்பிராணியின் பெயர் அல்லது பிடித்த விளையாட்டு அணி போன்ற சொற்களைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது, ஏனெனில் இந்த வகை தகவல்கள் எளிதில் யூகிக்கப்படலாம். வலுவான கடவுச்சொற்களை உருவாக்க சீரற்ற சொற்களைப் பயன்படுத்தவும், எண்கள் மற்றும் குறியீடுகள் இன்னும் பயன்படுத்தப்படலாம்.

(4) **வழக்கமான மென்பொருள் புதுப்பிப்புகள் மற்றும் தொகுப்பு முகாமை**: முறைமைகள் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதி செய்து, இணையக் குற்றவாளிகள் பயன்படுத்தக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும். வழங்குனர் மென்பொருளை புதுப்பிக்காதபோது இது நிகழ்கிறது, உ-ம். விண்டோஸ் போன்ற இயங்குதளங்கள், பயன்பாடுகள், வலை உலாவிகள், போன்றவை. மென்பொருள் தொடர்ந்து செயற்படும் என்றாலும், அது புதுப்பிப்புகள் அல்லது இணைப்புகள் மூலம் இணையவழி அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாக்காது.

(5) **வலையமைப்பு பிரிப்பு மற்றும் / தீச்சுவர்கள்**: சாத்தியமான மீறலின் தாக்கத்தை கட்டுப்படுத்த பிணையத்தை சிறிய பகுதிகளாக பிரித்து, தீங்கிழைக்கும் போக்குவரத்தை வடிகட்ட / தீச்சுவர்களைப் பயன்படுத்துகிறது.

(6) **பாதுகாப்பு கருவிகள் மற்றும் மென்பொருளின் பயன்பாடு**: இணையவழி அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து தடுக்க ஆன்டிவைரஸ், ஆன்டி-மால்வேர், மற்றும் ஊடுருவல் கண்டறிதல் முறைமைகள் (IDS) ஆகியவற்றின் பயன்பாடு. கணினிகள், டேப்லெட்டுகள் மற்றும் திறன்பேசிகள் மால்வேர் போன்ற சிறிய மென்பொருள் துகள்களால் பாதிக்கப்படலாம்.

(7) **தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் நுண்ணறிவு**: வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை அடையாளம் காண நிகழ்நேரத்தில் பிணைய செயல்பாட்டை கண்காணித்து பகுப்பாய்வு செய்யும் கருவிகள் மற்றும் முறைமைகள்.

**(04 புள்ளிகள்)**

**(c)**

(1) பொருந்தக்கூடிய தன்மை
(2) தரவு விடயங்களின் உரிமைகள்
(3) தரவு கட்டுப்பாட்டாளர், செயலாக்குநர்
(4) தரவு தக்கவைப்பு மற்றும் நோக்கம்
(5) சம்மதம்
(6) தரவு பாதுகாப்பு மற்றும் மீறல் முகாமை
(7) கடல் கடந்த தரவு பரிமாற்றங்கள்
(8) அபராதங்கள் மற்றும் அமுலாக்கம்

**(02 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 06 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 05 - தகவல் முறைமைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழிநுட்பப் போக்குகள்**

**(a)**

(1) அதிகரித்த வாடிக்கையாளர் வசதி
(2) விரிவாக்கப்பட்ட வாடிக்கையாளர் தளம் மற்றும் நிதி உள்ளடக்கம்
(3) அதிக பாதுகாப்பு
(4) குறைந்த தொழிற்பாட்டுச் செலவு
(5) அதிகரித்த பரிவர்த்தனை வேகம்
(6) கையில் குறைவான பணத்தைப் பயன்படுத்த விரும்பும் வாடிக்கையாளர்களை ஈர்த்தல்
(7) சிறந்த தரவு பகுப்பாய்வு

**(02 புள்ளிகள்)**

**(b)**

(1) **அதிகரித்த வினைத்திறன்**: தன்னியக்கமாக்கல் மற்றும் AI மீண்டெழும் பணிகளுக்கு தேவையான நேரத்தையும் முயற்சியையும் குறைக்கின்றன, இது விரைவான செயன்முறைகள் மற்றும் அதிக உற்பத்தித்திறனுக்கு வழிவகுக்கிறது.

(2) **மேம்படுத்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல்**: AI மற்றும் இயந்திர கற்றல் பெரிய அளவிலான தரவுகளை பகுப்பாய்வு செய்ய உதவுகின்றன, சிறந்த தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் மிகவும் இலக்குவைத்த தந்திரோபாயங்களுக்கு வழிவகுக்கும் நுண்ணறிவுகளை வழங்கும்.

(3) **கிரயக் குறைப்பு**: முப்பரிமாண அச்சிடுதல் போன்ற தொழிநுட்பங்கள் விரைவான முன்மாதிரிகள், தனிப்பயனாக்கங்கள், மற்றும் தேவைக்கேற்ப உற்பத்தியை

செயற்படுத்துவதன் மூலம் உற்பத்திக் கிரயங்களைக் குறைக்கின்றன.

(4) **புத்தாக்கம்**: வளர்ந்து வரும் தொழிநுட்பங்கள் புதிய உற்பத்தி விருத்தி மற்றும் சேவை வழங்கல்களை இயக்குகின்றன, வணிகங்களுக்கு தனித்துவமான தீர்வுகளுடன் வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வாய்ப்பை வழங்குகின்றன.

(5) **மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவம்**: AR/VR போன்ற தொழிநுட்பங்கள் அதிவேக அனுபவங்களை வழங்குகின்றன, வாடிக்கையாளர்கள் உற்பத்திகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புகொள்ளும் முறையை மேம்படுத்துகின்றன.

(6) **போட்டி வேறுபாடு**: அதிநவீன தொழிநுட்பங்களை முன்கூட்டியே பின்பற்றுவது, வணிகங்கள் தங்கள் போட்டியாளர்களிடமிருந்து தனித்து நிற்கவும், தொழிற்துறை தலைவர்களாக தங்களை நிலைநிறுத்தவும் உதவும்.

(7) **மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு**: மேகத்தள மேடைகள், தொலைதூர வேலை கருவிகள், மற்றும் கூட்டு மென்பொருள் போன்ற கருவிகளுடன், குழுக்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து மிகவும் திறம்பட வேலை செய்ய முடியும்.

(8) **எதிர்கால-தயார்நிலை**: புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், நிறுவனங்கள் நீண்டகால வளர்ச்சிக்கான நிலையை உருவாக்குகின்றன, வேகமாக மாறிவரும் சந்தையில் அவை பொருத்தமானதாக இருப்பதை உறுதி செய்கின்றன.

**(03 புள்ளிகள்)**

**(c)**

(1) வழிமுறையில் (prompt) தெளிவான மற்றும் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தல்.
(2) பொருத்தமான சூழல் அல்லது பின்னணி தகவல்களை வழங்குதல்.
(3) விரும்பிய வெளியீட்டு வடிவத்தை குறிப்பிடல் (உ-ம்: பட்டியல், அட்டவணை, படிப்படியான விளக்கம்).
(4) AI க்கு ஒரு வகிபாகம் அல்லது ஆளுமையை ஒதுக்குதல் (உ-ம்: “நிதி ஆலோசகராக செயற்படுக”).
(5) சிக்கலான பணிகளை பகுதிகளாக உடைத்தல்.
(6) வழிமுறையில் உதாரணங்களைப் பயன்படுத்தல்.
(7) ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தில் இருந்து சிந்திக்க AI யை கோருதல்.
(8) சிறந்த பெறுபேற்றுக்காக சூழலைப் பயன்படுத்தல்.
(9) படிப்படியான அறிவுறுத்தல்களைப் பயன்படுத்தல்.
(10) பரிசோதனை செய்து சீராக்குதல்.

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

**பிரிவு B முடிவு**

aat SRI LANKA

**ஒரு (01) கட்டாய வினாக்கள்.**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**பிரிவு - C**

**வினா 07 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:**

**(a)** (1) **கணினி வன்பொருள் தளங்கள்**:

உதாரணங்கள்:

- சேவையகங்கள் (பௌதீக அல்லது மேகத்தள)
- மேசைக் கணினிகள்
- தரவு நிலையங்கள்
- மடிக்கணினிகள்
- வாடிக்கையாளர் சாதனங்கள்
- அச்சுப்பொறிகள்
- பகுப்பாய்விற்கான உயர்-செயல்திறன் செயலாக்கம்
- தரவு சேமிப்பு சாதனங்கள்
- காப்புப்பிரதி சேவைகள்
- சலாகைக்குறி வருடிகள் (Barcode scanners)

(2) **தரவு முகாமை மற்றும் சேமிப்பு (மேகத்தள முறைமைகள் உட்பட)**

உதாரணங்கள்:

- ஒரேக்கிள் தரவுத்தளம்
- மைக்ரோசாப்ட் SQL சேவையகம்
- MySQL.
- Postgre SQL.
- Mongo DB.
- IBM Db2.
- விவசாயிகளின் பதிவுகள், உத்தரவுகள், விலை நிர்ணயம், மற்றும் விநியோக அட்டவணைகளை நிர்வகிக்க நிறுவன DBMS பிரயோகம்
- மேகத்தளக் கணினியியல் கட்டமைப்பைப் பின்பற்றல்
- மைய சேமிப்பின் பயன்பாடு (NAS / SAN / மேகத்தள தரவு நிலையங்கள்)
- பிராந்தியங்களில் தரவு பகிர்வை செயல்படுத்தல்.
- அளவிடுதல் திறன் மற்றும் தொலை அணுகலை ஆதரித்தல்.
- தரவு நிலைத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

(3) **வலையமைப்பு / தொலைத்தொடர்புத் தளங்கள்:**

உதாரணங்கள்:

- பிராந்திய அலுவலகங்களுக்கு இடையிலான இணைப்பு. பரந்த பகுதி பிணையம், நிறுவன பிணையம், ரூட்டர்கள், சுவிட்சுகள், / தீச்சுவர், Wi-Fi அணுகல், புள்ளிகள் இணைய இணைப்புகள், தொலைதூர தொழிலாளர்களுக்கான VPN.
- இணைய மேடை ஒருங்கிணைப்பு.
- நிகழ்நேர கட்டுப்பாட்டு அறைகளை ஆதரிக்கிறது.
- மேகத்தள அணுகலை செயல்படுத்துகிறது.
- விவசாயிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுடன் பாதுகாப்பான தொடர்பாடல்.

**(4) இயங்குதள முறைமைகள்:**

உதாரணங்கள்:

- சேவையக இயங்குதளங்கள் (Windows Server / Linux / Ubuntu / Oracle / Microsoft excel)
- தரவுத்தளம் மற்றும் நிறுவனப் பிரயோகங்களுக்கு ஆதரவளிக்கிறது
- மேகத்தள சேவையக இயக்க முறைமை இணக்கத்தன்மை

**(5) நிறுவனமுயற்சிசார் மென்பொருள் தீர்வுகள்:**

உதாரணங்கள்

SAP ERP, Oracle ERP cloud, Sales force CRM, Microsoft Dynamics 365, Odoo.

**(6) இணையவழித் தளங்கள்:**

உதாரணங்கள்:

- வலை சேவையகங்கள், மேகத்தள சேவைகள், மின் வணிக முறைமைகள்.
- விவசாயி கைத்தொலைபேசி செயலி, சில்லறை விற்பனையாளர் கட்டளையிடல் தளம், வழங்குநர் தளம், நிகழ்நேர கட்டுப்பாட்டு அறை, இணையவழி பணம் செலுத்தும் நுழைவாயில்.

**(7) ஆலோசனை மற்றும் முறைமைகள் ஒருங்கிணைப்பு சேவைகள்**:

உதாரணங்கள்:

- ERP அமுலாக்கல் ஆலோசனை.
- மேகத்தள இடப்பெயர்த்தல் சேவைகள்.
- தரவுத்தள ஒருங்கிணைப்பு சேவைகள்.

SRI LANKA

**(04 புள்ளிகள்)**

**(b)**

| **முகாமை மட்டம்** | **தகவல் முறைமை** | **தீர்மான முறைமை** |
|---|---|---|
| தொழிற்பாட்டு மட்டம் | பரிவர்த்தனை செயலாக்க முறைமை (TPS) | வழக்கமான/கட்டமைக்கப்பட்ட தீர்மானங்கள் / தொழிற்பாட்டு / குறுகிய காலம் |
| உபாய (இடைநிலை) மட்டம் | முகாமை தகவல் முறைமை (MIS) | அரை-கட்டமைக்கப்பட்ட தீர்மானங்கள் / முகாமைத் தீர்மானங்கள் / தொழிற்தேர்ச்சி தீர்மானங்கள் |
| தந்திரோபாய (உயர்) மட்டம் | நிறைவேற்றுனர் தகவல் முறைமை (EIS) அல்லது தீர்மான ஆதரவு முறைமை (DSS) வணிக நிபுணர் முறைமை | தந்திரோபாய / கட்டமைக்கப்படாத தீர்மானங்கள் / நீண்ட காலம் |

**(06 புள்ளிகள்)**

**(c)** (1) **செயன்முறைகளின் தன்னியக்கமாக்கல்**: எண்ணியல் கருவிகள் மற்றும் மென்பொருள் மீண்டும் மீண்டும் வரும் பணிகளை தன்னியக்கமாக்குகின்றன, மனிதத் தவறுகளைக் குறைத்து, ஊழியர்களை உயர் மதிப்புள்ள வேலைக்காக விடுவிக்கின்றன. உதாரணமாக, இருப்பு முகாமை அல்லது வாடிக்கையாளர் ஆதரவை தன்னியக்கமாக்குவது தொழிற்பாட்டு வேகத்தை மேம்படுத்தும்.

(2) **தரவு உந்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல்**: நிகழ்நேரத்தில் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம், நிறுவனங்கள் செயல்திறனின்மைகளை அடையாளம் காணவும், சாத்தியமான சவால்களை கணிக்கவும், மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு விரைவாக பதிலளிக்கவும் முடியும். இது ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நிறுவனங்கள் வேகமான மற்றும் எப்போதும் உருவாகும் வணிக நிலப்பரப்பில் போட்டித்தன்மையுடன் இருக்க அதிகாரம் அளிக்கும் சுறுசுறுப்பையும் மேம்படுத்துகிறது.

(3) **மேம்படுத்தப்பட்ட தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பு**: மேகத்தள அடிப்படையிலான தளங்கள் மற்றும் எண்ணியல் தொடர்பாடல் கருவிகள், இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல், நிகழ்நேர தகவல் பகிர்வு மற்றும் வளங்களுக்கான மையப்படுத்தப்பட்ட அணுகலை வழங்குவதன் மூலம் குழுக்கள் தடையின்றி ஒத்துழைக்க உதவுகின்றன. இந்த கருவிகள் தாமதங்களை குறைக்கின்றன, தன்னியக்கமாக்கல் மூலம் பணிப்பாய்வுகளை ஒழுங்குபடுத்துகின்றன, மற்றும் சீரான திட்ட முகாமையை உறுதி செய்கின்றன. இதன் விளைவாக மேம்படுத்தப்பட்ட செயல்திறன், அதிகரித்த உற்பத்தித்திறன், மற்றும் மிகவும் இணைக்கப்பட்ட பணியாளர்கள் ஆகும்.

SRI LANKA

(4) **கிரயக் குறைப்பு**: எண்ணியல் கருவிகள் வணிக செயன்முறைகளை ஒழுங்குபடுத்த உதவுகின்றன. இது பௌதீக ரீதியான மனித/சாதனங்கள் (வளங்கள்) தேவையை குறைத்து, செயல்பாட்டு செலவுகளை குறைக்கிறது. இறுதியில், ஒரு மெலிந்த மற்றும் அதிக கிரய-பயனுறுதிமிக்க நிறுவனத்திற்கு பங்களிக்கிறது.

**(05 புள்ளிகள்)**

**(d)** (1) **தரவு தனியுரிமை / பாதுகாப்பு**

விவசாயிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களின் தனிப்பட்ட மற்றும் வணிக தகவல்கள், அங்கீகரிக்கப்படாத அணுகல் அல்லது தவறான பயன்பாட்டைத் தடுக்க, முறையான சம்மதத்துடன் பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டு, சேமிக்கப்பட்டு, செயலாக்கப்பட வேண்டும்.

(2) **படிமுறை சார்பு மற்றும் நேர்மை**

AI அடிப்படையிலான விலை நிர்ணயம் அல்லது தீர்மான முறைமைகள், படிமுறைகள் சார்புடையதாக அல்லது முழுமையற்ற தரவுகளின் அடிப்படையில் இருந்தால், சில விவசாயிகளை தற்செயலாக பாதிக்கலாம். முடிவுகள் வெளிப்படையானதாகவும், தவறாமல் மதிப்பாய்வு செய்யப்படுவதாகவும் இருக்க வேண்டும்.

(3) **புலமைச் சொத்துரிமைகள்**

விவசாய முறைகள், விலை நிர்ணய தந்திரோபாயங்கள், மற்றும் சந்தை

நுண்ணறிவுகள் போன்ற தரவுகள் விவசாயிகள் அல்லது சில்லறை விற்பனையாளர்களுக்கு சொந்தமானதாக இருக்கலாம். AgroLink முறையான அனுமதி இல்லாமல் இந்த தரவுகளை இலாபத்திற்காக பயன்படுத்தலாம் அல்லது பகிர்ந்து கொள்ளலாம். தரவு மற்றும் அறிவின் உரிமையை மதிப்பது மற்றும் பயனர்களின் தகவல்களை நியாயமற்ற முறையில் பயன்படுத்தாமல் இருப்பது முக்கியம்.

(4) **செயற்கை நுண்ணறிவின் நெறிமுறைகள்**
எண்ணியல் நிலைமாற்றம் கணிசமான நன்மைகளை வழங்குகிறது, இதில் தன்னியக்கமாக்கல், தரவு உந்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு ஆகியவை உள்ளடங்கும், இவை அனைத்தும் அதிகரித்த தொழிற்பாட்டு வினைத்திறன் மற்றும் கிரயக் குறைப்புக்குப் பங்களிக்கின்றன. இருப்பினும், இந்த முன்னேற்றங்கள் தனியுரிமை கவலைகள், தரவு பாதுகாப்பு அபாயங்கள், மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகல் இல்லாத கிராமப்புற விவசாயிகளுக்கு சாத்தியமான எண்ணியல் விலக்கு போன்ற முக்கியமான நெறிமுறை மற்றும் பாதுகாப்பு சவால்களை கொண்டு வருகின்றன. பொறுப்புடன் செயல்பட, நிறுவனங்கள் AI முறைமைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்ய வேண்டும், இது சார்பு அல்லது கையாளுதலைத் தடுக்க, அதே நேரத்தில் மின்னணு கழிவுகளை நிர்வகிப்பதற்கான “குறைத்தல், மீண்டும் பயன்படுத்துதல், மற்றும் மறுசுழற்சி” அணுகுமுறை மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கு உறுதிபூர்வமாக இருக்க வேண்டும்.

**(04 புள்ளிகள்)**

**(e)** (1) **குறைத்தல் (Reduce)** குறைத்தல் என்பது புத்திசாலித்தனமான கொள்வனவு மற்றும் பயன்பாட்டுத் தீர்மானங்களை மேற்கொள்வதன் மூலம் மின்னணு கழிவுகளை குறைப்பதாகும். இதில் தேவையான சாதனங்களை மட்டும் வாங்குதல், அவற்றின் ஆயுளை நீட்டிக்க பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல், நீடித்த மற்றும் மேம்படுத்தக்கூடிய உற்பத்திகளைத் தெரிவு செய்தல், மற்றும் ஆற்றல்-விளைதிறனுள்ள தொழிநுட்பத்தைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை உள்ளடங்கும்.

(2) **மீளப் பயன்படுத்துதல் (Reuse)** ஒரு பழைய கணினி பயனர் தேவைகளை பூர்த்தி செய்தால் அது தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில், அது தேவைப்படும் ஒருவருக்கு வழங்கப்படலாம் அல்லது செயற்பாட்டுக் கூறுகள் ஓய்வு பெற்ற உற்பத்தியிலிருந்து பயன்படுத்தப்படலாம். வன்பொருளை நீண்ட காலத்திற்கு பயன்படுத்துவதன் மூலம், கணினி உற்பத்தி மற்றும் அகற்றல் காரணமாக ஏற்படும் மொத்த சுற்றுச்சூழல் தடம் பெரிதும் குறைக்கப்படும்.

(3) **மறுசுழற்சி (Recycle)** கணினிகளை மீண்டும் பயன்படுத்த முடியாதபோது, புதுப்பித்தல் வாய்ப்புகளை கருத்தில் கொண்ட பின்னரும், அவை சுற்றுச்சூழல் நட்பு வழிகளில் முறையாக அகற்றப்பட வேண்டும். பழைய மின்னணு முறைமைகள், கூறு பொருட்களை எடுத்து அதே பொருளாக மீண்டும் செயலாக்குவதன் மூலமோ அல்லது மீண்டும் பயன்படுத்துவதற்காக அதை உட்பொருட்களாக உடைப்பதன் மூலமோ மறுசுழற்சி செய்யப்பட வேண்டும்.

**(06 புள்ளிகள்) (மொத்தம் 25 புள்ளிகள்)**

## *Notice:*

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*